Previous Date of examination : 03.11.2020

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No.25/2020**

**PW 66 –** ரமேஷ் , த/பெ. நவநீதகிருஷ்ணன்

(1, 2 எதிரிகள் ஆஜர்)

**சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மீண்டும் அழைக்கப்பட்டு, அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி...**

**(1)** நீதிமன்ற உத்தரவுப்படி எனது வசம் இருந்த ஆவணத்தினை நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். மேற்படி ஆவணமானது எனக்கு 1 வது எதிரி சக்திவேல் என்பவர் வேலை வாங்கி தருவதாக வாங்கிய பணத்தை திரும்ப தருவதற்கு உத்தரவாதம் அளித்து எழுதிக்கொடுத்த ஆவணமாகும். 1 வது எதிரி வீட்டில் வைத்து 16.03.2019 ம் தேதி எழுதி கொடுத்தார். அந்த ஆவணத்தை 1 வது எதிரி எழுதி கொடுத்த போது 1 வது எதிரியின்அம்மா,அப்பா,மனைவி ஆகியோர் இருந்தார்கள். என்னுடன் கார்த்திகாவின் அப்பா பாலகிருஷ்ணன், ஐஸ்வர்யா மாமனார் ஆனந்தன், ராதிகா, அர்சஜூன்ஆகியோரும் இருந்தார்கள். **( 1 வது எதிரி தரப்பில் 16.03.2019 ம் தேதி ஆவணத்தில் உள்ள கையெழுத்து 1 வது எதிரியின் கையெழுத்து இல்லை என்றும்,அதனால் ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபனை உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி ஆட்சேபனையானது ஏற்புடையதாக இல்லை என்பதாலும், எதிரியின்கையெழுத்தா, இல்லையா என்பது விசாரணைக்கு பின்னர்தான் தெரியவரும் என்பதால் 1 வது எதிரி தரப்பு ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டு ஆவணத்தை குறியீடு செய்ய அனுமதியளிக்கப்படுகிறது) (16.03.2019 ம் தேதி ஒப்பந்த ஆவணம் அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது) .**

**(2)** மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டபடி 1 வது எதிரி பணத்தை தரவில்லை என்பதால் திருவாரூர் நகர காவல் நிலையம் போய் புகார் கொடுத்தோம். விசாரித்துவிட்டு சொல்வதாகவும், 60 நாள் கழித்து வருமாறும் சொன்னார்கள். 60 நாட்கள் பிறகு நாங்கள் போய் கேட்டபோது வழக்கு நீதிமன்றத்திற்கு போய்விட்டதாக சொல்லிவிட்டார்கள். அதன் பிறகு எதிரியிடம் போய் கேட்டபோது கோர்ட்டில் கேஸ் உள்ளது, அது முடிந்தால்தான் தரமுடியும் என சொல்லிவிட்டார்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

**(1)** நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ஸ்டூடியோ வைத்து நடத்தி வருகிறேன். அதை தவிர வேறு வேலை செய்யவில்லை. எனது ஸ்டூடியோவில் இரண்டு உதவியாளர்கள் உள்ளார்கள். ராஜமகேந்திரன் என்பவர் எனக்கு தொழில் ரீதியாக நண்பர் . அவர் சுமார் 30 வருட காலமாக எனக்கு நண்பர். அவர் லெட்சுமாங்குடியில் ராஜா ஸ்டூடியோ என்ற பெயரில் கடை நடத்தி வருகிறார். இருவரும் ஒரே தொழில் செய்து வருவதால் அடிக்கடி பார்த்து பேசிக்கொள்வோம் என்றால் சரிதான். எனக்கு 1 வது எதிரியை ராஜமகேந்திரன்தான் அறிமுகபடுத்தியதாக சொல்கிறேன் என்றால் சரிதான். அவ்வாறு ராஜமகேந்திரன் அறிமுகபடுத்துவதற்கு முன்பாக நான் 1 வது எதிரியை பார்த்தது இல்லை என்றால் சரிதான். ராஜமகேந்திரன் என்னிடம் என்ன சொன்னார் என்றால் எனக்கு தெரிந்த நண்பர் துர்க்காலயா ரோட்டில் இயற்கை அங்காடி என்ற பெயரில்கடை வைத்துள்ளார் என்றும்,அவருக்கு வேண்டியவர்கள் நீதிமன்றத்தில் வேலை செய்வதால் அவர் நீதிமன்றத்தில் வேலை வாங்கி கொடுப்பார் என்றும் தேவை படும் நபர்களுக்கு நீங்கள் சொன்னால் வேலை வாங்கி தருவார் என்று சொன்னார்.

**(2)** எப்போது ராஜமகேந்திரன் என்னிடம் மேற்படி தகவல்களை சொன்னார் என்றால் 2018 ஜனவரி 2 வது வாரத்தில் சொன்னார். 1 வது எதிரியின் போன் நம்பர் யார் எனக்கு கொடுத்தார் என்றால் சக்திவேல்தான் எனக்கு போன் செய்தார். எனக்கு பழக்கம் இல்லாத நபர் எப்படி போன் செய்தார் என்றால் ராஜமகேந்திரன் சொன்னதன் அடிப்படையில் 1 வது எதிரி என்னிடம் பேசினார். நான் சொல்லியுள்ள 15 நபர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்றால் வெளியூரை சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். மேற்படி 15 நபர்களுக்கும் வேலை வாங்கி தருவதாக ஆசை வார்த்தை சொன்னேன் என்றால்இல்லை. மேற்படி 15 நபர்களுக்கு என் மூலம்தான் 1 வது எதிரி சக்திவேலை தெரியும் என்றால் சரிதான். வேலை கிடைக்குமா என நான் விசாரித்து தெரிந்துக்கொண்டு பணம் கொடுத்தேனா என்றால் 1 வது எதிரிதான் உயர் அதிகாரிகளை எனக்கு தெரியும், நான் வேலை வாங்கிதந்து விடுவேன். யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று சொன்னார்.

**(3)** மேற்படி 15 நபர்களிடமும் வேலை பணம் கொடுத்து வாங்கும் விபரத்தை வெளியில் சொல்லவேண்டாம் என்று நான் சொன்னேனா, என்றால் சொல்லவில்லை. நான் எத்தனை முறை 1 வது எதிரி சக்திவேல் வீட்டிற்கு போய்யுள்ளேன் என்றால் சுமார் 20 முறை போயுள்ளேன். சுமார் 7, 8 முறை ராஜமகேந்திரனும் வந்தார். மேற்படி 15 நபர்கள் மாறி, மாறி சிலமுறை வந்துள்ளார்கள். பெரும்பாலும் நான் ஞாயிற்று கிழமைகளில்தான் 1 வது எதிரி வீட்டிற்கு போயுள்ளேன் என்றால் சரிதான். எதற்காக ஞாயிற்று கிழமைகளில்போவேன் என்றால் பணம்கொடுத்த

நபர்களை ஒன்று சேர்ப்பதற்காக ஞாயிற்று கிழமைகளில் போனேன். அவ்வாறு என்னோடு வந்த நபர்கள் பலநபர்கள் 2வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் பேசியுள்ளார்கள் என்றால் இரண்டு பேர் மட்டும் பேசியுள்ளார். ஆனந்தன், பாலகிருஷ்ணன் ஆகியோர் கோவிந்தலெட்சுமியிடம் பேசியுள்ளார்கள்.

**(4)** அ.சா.ஆ.16 ஒப்பந்த ஆவணத்தை எதற்காக 1வது எதிரி எழுதி கொடுத்தார் என்றால் பணத்தை அவர் வாங்கியதை ஒப்புக்கொண்டு திருப்பி தருவதாக உறுதியளித்து எழுதி கொடுத்தார். 15 நபர்களுடைய பெயர் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். அந்த பத்திரம் வாங்கிய அன்றே எழுதினோம் என்றால் 1வது எதிரி வாங்கி எழுதி கொடுத்தார். அதனால் வாங்கிய தேதிதெரியவில்லை. மேற்படி பத்திரத்தினை 1வது எதிரி வாங்கவில்லை என்றும், மேற்படி எனது பெயரில் வாங்கியுள்ளேன் என்றால் நான் வாங்கினேனா என்று சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி ஆவணத்தில் உள்ள கையெழுத்து 1வது எதிரியினுடையதல்ல என்றும், எனக்கு வேண்டிய நபர்களை வைத்து ஆவணத்தை தயார் செய்து கையெழுத்து போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 15 நபரிடம் நான் வாங்கியதாக சொல்லும் தொகை முழுவதும் என் வசம்தான் உள்ளது என்றால் சரியல்ல.

**(5)** மேற்படி ஆவணத்தை போலிசார் என்னை விசாரித்தபோது காட்டினேனா என்றால் இல்லை. இருப்பதாக சொன்னேன். போலிசாரிடம் நான் கொடுத்து அவர்கள் வேண்டாம் என்னிடம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனது பணத்திற்கு பாதுகாப்பு வேண்டும் என்பதற்காக நான் வைத்திருந்தேன். போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் மூன்று முறை விசாரித்தார்கள். என்னை விசாரித்தபோது மேற்படி நான் சொல்லும் 15 நபர்களும் இருந்தார்களா என்றால் ஒருசிலர் மட்டும் மாறி,மாறி இருந்தார்கள்.

**(6)** 2வது எதிரி கோவிந்தலெட்சுமி கோர்ட்டில் மண்ணெண்ணெய்யை ஊற்றிக்கொண்டபோது நான் வந்தேனா என்றால் கோர்ட் வளாகத்திற்கு வெளியே நின்றிருந்தேன். அப்போது என்னுடன் ராதிகா, அர்ஜுன் , பாலகிருஷ்ணன், ஆனந்தன் ஆகியோரும் இருந்தார்கள். எதற்காக கோர்ட்டிற்கு வந்தேன் என்றால் 1வது எதிரி சக்திவேல் வீட்டில் நாங்கள் போய் கேட்டபோது 2வது எதிரி கோவிந்தலெட்சுமி வந்து சொல்லுவார் என எங்களிடம் சொன்னார். அப்போது வெளியே வந்த கோவிந்தலெட்சுமி எங்களிடம் மேடம் வெளியே போய்யுள்ளார்கள், வந்தவுடன் வேலை ரெடியாகிவிடும் என்று ஏற்கனவே நான் சொன்ன தகவலானது 1வது எதிரி கேட்டுக்கொண்டபடி சொன்னேன் எனக்கும், அதற்கு சம்பந்தம் இல்லை என சொல்லிவிட்டு கோர்ட்டுக்கு வந்துவிட்டார். கோவிந்த லெட்சுமி பின்னால் சக்திவேலும் வந்தார். சக்திவேல் பின்னால் நாங்களும் கிளம்பி வந்தோம்.

**(7)** என்னுடன் ராதிகா, அர்ஜுன் , பாலகிருஷ்ணன், ஆனந்தன் ஆகியோரும் வந்தார்கள். என்னுடன் வந்தவர்கள் நீதிமன்ற மாடிக்கு சென்றார்களா? என்றால் இல்லை. என்னிடம் வாங்கிய பணம் முழுவதையும் 2வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்த விபரத்தை 1வது எதிரி எங்களிடம் சொன்னார் என்றும்,அதனால் கோவிந்தலெட்சுமியிடம் பணம் கேட்டு சண்டை போட்டு நீதிமன்றத்திற்கு வந்துள்ளோம் என்றால் சரியல்ல. 2வது எதிரி பணத்தை நீங்கள் என்னிடம் கொடுக்கவில்லை, அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னார். நீதிமன்ற வாளாகத்தில் நடந்த சம்பவதன்று மேற்படி அ.சா.ஆ.16 ஆவணம் எழுதப்பட்டதா? என்றால் அதற்கு முன்பே எழுதப்பட்டது.

**(8)** நீதிமன்றத்தில் மண்ணெண்ணெய்யை 2வது எதிரி ஊற்றிக்கொண்டதாக சொல்லும் சம்பவம் 01.03.2019ம் தேதி நடந்தது என்றால் அந்த தேதி எனக்கு தெரியவில்லை. நான் பலபேரிடம் வேலை வாங்கி தருவதாக ஆசை வார்த்தை கூறி பணத்தை வசூல் செய்து குற்றத்திற்கு உடந்தையாக செயல்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 15 நபர்களும் நேரடியாக 1வது எதிரியிடம் பேசிதான் பணம் கொடுத்தார்கள். மேற்படி 15 நபர்களும் அவர்களுடைய சாட்சியத்தில் என்னிடம்தான் பணம் கொடுத்தார்கள் என சொல்லியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. 2 வது எதிரி அரசு வேலையில் இருப்பதால் அவரை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் 1வது எதிரியை மட்டும் குறிப்பிட்டு நான்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரியை எனக்கு நேரடியாக தெரியாது.

**(9)** 2 வது எதிரி ஏன் மண்ணெண்ணெய்யை ஊற்றிக்கொண்டார் என நான் கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் அவசியமில்லை என்பதால் தெரிந்துக்கொள்ளவில்லை. 1வது எதிரி என்னுடன் செல்போனில் பேசிய விபரத்தை நான் பதிவு செய்து வைத்துள்ளதாக போலிசாரிடம்சொன்னேனா என்றால் நான் பதிவு செய்து வைக்கவில்லை, நான்சொல்லும் 15 நபர்களில் சிலர் பதிவு செய்து வைத்துள்ளார்கள். சிவரஞ்ஜனி மற்றும் முத்துபாண்டி ஆகியோர் கணவன்,மனைவி என்றால் சரிதான். அ.சா.35 சிவரஞ்சனி பணத்தை என்னிடம் கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் என்னிடம் கொடுத்து சக்திவேலிடம் கொடுத்தார். நான் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1வது எதிரி பணத்தை கொடுத்து தானும் ஏமாந்ததாக சொல்லியுள்ளார் என்றால் பணத்தை அவர் மேலதிகாரியிடம் பணத்தை கொடுத்துவிட்டதாகவும்,அவர்கள் ஏமாற்றிவிட்டதாகவும்சொன்னார். 1 வது எதிரி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் அவர் கொடுத்ததாக சொன்னார். எனக்கு நேரடியாக தெரியாது. நான் கொடுத்ததாக சொல்லும் ரூ.15லட்சம் 1வது எதிரி பொறுப்பல்ல

என்றால் சரியல்ல. அ.சா.ஆ.16 ஆவணமானது போலிசார் விசாரணைக்கு பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் 1 வது எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்கு அவசியமற்ற சாட்சி என்று சொன்னால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-**

**(1)** நான் எனது முதல் விசாரணையில் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை தொடர்படுத்தி நாங்கள் வாரம், வாரம் வந்து கேட்டதாகவும், வேலை வந்துவிடும் என காலம் கடத்தினார் என்றும், அவ்வாறு 9 மாதங்கள் ஆகிவிட்டது எனவும், அதன்பிறகு நாங்கள் வந்து கேட்டதால் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி தான் பணம் கொடுத்தார் அவரிடமே கேட்டுக்கொள்ளுங்கள் என 1 வது எதிரி சொன்னதாகவும், 2 வது எதிரி கோவிந்தலெட்சமி 1 வது எதிரி வீட்டில் குடியிருப்பதாகவும் வேலை சம்பந்தமாக மேடம் சென்னை போயுள்ளார்கள் என்றும், வேலை கிடைத்துவிடும் என்று 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி உறுதியளித்தார் என்றும் நான் சொல்லியுள்ள விபரங்களை போலிசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றும், தற்போது 2 வது எதிரியை தொடர்புபடுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(2 )** ஒரு வாரம் கழித்து 1 வது எதிரியின் வீட்டிற்கு போனதாகவும், அப்போது 1 வது எதிரி 2 வது எதிரியை அழைத்து வருவதாக சொல்லி சென்று 2 வது எதிரியை அழைத்து வந்ததாகவும், சக்திவேல் சொன்னதால்தான் நான் சொன்னேன் என எங்களிடம் சொல்லிவிட்டு, 2 வது எதிரி கோர்ட்டுக்கு வந்துவிட்டார் என்றும், அவர் பின்னாலேயே சக்திவேல் வந்தார் என்றும், அவருடன் நாங்களும் கோர்ட்டுக்கு வந்து கோர்ட்டின் வாயிலுக்கு வெளியில் நின்றுக்கொண்டிருந்ததாகவும், அப்போது சுரேஷ் எ ன்பவர் வந்து 2 வது எதிரி மண்ணெண்ணெய்யை ஊற்றிக்கொண்டார் என சொன்னார் என்றும் நான் சொல்லியுள்ள சங்கதிகளை போலிசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றும், முதன்முறையாக 2 வது எதிரியை தொடர்புபடுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(3)** 2 வது எதிரி என்னிடம் வேலை இருப்பதாக சொல்லி பணம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். எனக்கு அவரை நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 2 வது எதிரியிடம் ஆனந்தன், பாலகிருஷ்ணன் பேசியுள்ளதாக கூறுவது உண்மையல்ல என்றும் நான் வேண்டும் என்றே தொடர்புபடுத்தி பொய்

சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் நான் போலிசார் விசாரணையிலும், நீதிமன்ற விசாரணையிலும் முரண்பட்டு சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 வது எதிரியிடம் கொடுத்ததாக சொல்லும் தொகையை நான் கேட்டு வருகிறேனா என்றால் கேட்டு வருகிறேன். ஆனால் கிடைக்கவில்லை. 1 வது எதிரி அந்த பணத்தை கொடுத்துவிடுவதாக சொன்ன ஆசை வார்த்தையின் அடிப்படையில் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க 2 வது எதிரியை தொடர்புபடுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் நான் நீதிமன்றத்திற்கு வந்ததாகவும், 2 வது எதிரி மண்ணெண்ணெய்யை ஊற்றிக்கொண்டதாக கேள்விப்பட்டதும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 2 வது எதிரி அரசு ஊழியர்என்பதால் அவரை தொடர்புபடுத்தி சாட்சியமளித்தால் பணம் கிடைத்துவிடும் என 1 வது எதிரி கூறிய ஆசை வார்த்தையின் அடிப்படையில் 2 வது எதிரியை தொடர்புபடுத்தி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** **.** இல்லை.

ஒம்/- எல்.ரகுபதிராஜா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.